செ.வெ.எண்:.1092 நாள்:13.12.2010

**பத்திரிக்கைச் செய்தி**

சமையல் எரிவாயு முகவர்களின் விநியோகத்தில் ஏற்படுகின்ற சேவைக் குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்பொழுது சமையல் எரிவாயு நுகர்வோர்களால் புகார்கள் தெரிவிக்கப்பட்டு வருகின்றன. சென்னை மாநகரம் மற்றும் புறநகர் பகுதிக்குட்பட்ட சமையல் எரிவாயு நுகர்வோர்கள் நலன் கருதி மேற்கண்ட சேவைக் குறைபாடுகள் குறித்தப் புகார்களை நேரடியாக தெரிவித்து நிவாரணம் பெற ஏதுவாக வருகிற டிசம்பர் 18ஆம் தேதி சனிக்கிழமை காலை 11.00 மணி முதல் மதியம் 12.30 மணி வரை சென்னை 600 019, திருவொற்றியூர் நெடுஞ்சாலையில் திருவொற்றியூர் வணிக வளாகத்திற்கு அருகில் உள்ள திருவள்ளுவர் கலையரங்கத்தில், உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, இணை ஆணையாளர் , திருமதி ஆர்.லில்லி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் எரிவாயு நுகர்வோர் குறைதீர் கூட்டம் நடைபெற உள்ளது. இக்குறைதீர் கூட்டத்தில் எண்ணெய் நிறுவன உயர் அலுவலர்களும், எரிவாயு முகவர்கள் சங்க பிரதிநிதிகளும் கலந்து கொள்ள உள்ளனர். எனவே, சென்னை மாநகரம் மற்றும் புறநகர் பகுதியைச் சேர்ந்த எரிவாயு நுகர்வோர்கள் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டு எண்ணெய் நிறுவன உயர் அலுவலர்களிடம் தங்கள் குறைகள் மற்றும் புகாரினை நேரடியாக தெரிவித்து பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

ஒம் /–கா.பாலச்சந்திரன்
ஆணையாளர்
உணவுப் பொருள் வழங்கல் மற்றும்
நுகர்வோர் பாதுகாப்புத் துறை

ஆணையாளருக்காக 13.12.10

வெளியீடு, இயக்குநர்,
செய்தி மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9

13/12/10